மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | Two Hours / Gr -9 | | T | I,II |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

## பகுதி I

1). இறை படைப்பில் மிக உயர்ந்த படைப்பு

1. மனிதன் 2. விலங்குகள் 3. பறவைகள் 4. தாவரங்கள்

2) பகைவரிடம் அன்பு செலுத்தி முன்மாதிரியாக வாழ்ந்தவர்

1. சவுல் 2. தாவீது 3. சாலமோன் 4. ஸ்தேவான்

3) கானாவூர் திருமணம் குறித்துக்கூறும் நற்செய்தி நூல் எது?

1. மத்தேயு 2. லூக்கா 3. யோவான் 4. மார்க்கு

4) ஆண்டவரே என் ....................... எனக்கேதும் குறைவில்லை.

1. தந்தை 2. குரு 3. தாய் 4. ஆயர்

5) “சாகும் தறுவாயிலிருக்கும் என் மகனைக் குணமாக்கவாரும்”என இயேசுவை அழைத்தவர்

1. நயீன் ஊர் விதவை 2. நூற்றுக்கதிபதி 3. ஆரச அலுவலர் 4. அந்திப்பஸ் ஏரோது

6) பஞ்ச நூல்களுள் அடங்காதது

1. தொடக்க நூல் 2. ஏசாயா 3. லேவியர் 4. எண்ணிக்கை

7) கானாவூர் திருமணத்தில் இயேசுவால் பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்கும் என விசுவாசித்தவர் யார்?

1. மரியாள் 2. திருமணத்தம்பதியர் 3. சீடர்கள் 4. வேலைக்காரர்

8) திருத்தூதர்கள் தூய ஆவியைப் பெற்றபின் செய்த முதலாவது செயல்

1. தொற்காவை உயிருடன் எழுப்பியமை
2. அசுத்தாவியைத் துரத்தியமை
3. பார்வையற்றவனைக் குணப்படுத்தியமை
4. பிறவியிலே கால் ஊனமுற்றவனைக் குணப்படுத்தயமை

Past Papers Wiki

9) இயேசுவின் உயிர்ப்பால் புதுவாழ்வு ஏற்படும் என திருத்தூதர் கூறியதை மறுத்தவர்கள்

1. பரிசேயரும் சதுசேயரும் 2. தலைமைக் குருவும்,சதுசேயரும்

3. தலைமைக் குருவும்,பரிசேயரும் 4. தலைமைக் குருவும்,அரசஅலுவலரும்

10) திருச்சபைக்காக முதலாவதாக தனது உயிரை அர்ப்பணித்து மறைசாட்சியாக மரித்தவர் யார்?

1. சவுல் 2. பேதுரு 3. ஸ்தேவான் 4. யோவான்

11) திருத்தொண்டர் ஸ்தேவானுக்கு கல்லெறிந்த வாலிபர்களின் மேலுடைகளைப் பாதுகாத்தவர் யார்?

1. சவுல் 2. பேதுரு 3. பர்னபா 4. பிலிப்பு

12) பணத்தை சம்பாதிக்கும் தீமையான வழி அல்லாதது

1. களவு 2. சூது 3. மோசடி 4. வேலைசெய்தல்

13) திருத்தொண்டர் எத்தனைபேர்

1. ஐந்து 2. ஆறு 3. ஏழு 4. எட்டு

14) ஊனியல்பின் செயல்களுள் ஒன்று

1. அன்பு 2. மன்னிப்பு 3. இரக்கம் 4. பகைமை

15) அன்று யூத சமூகத்தில் மக்களைத் துன்பத்திற்குஉட்படுத்தாதவர்

1. குருக்கள் 2. இயேசு 3. பிரபுக்கள் 4. ஆட்சியாளர்

16) பவுல் இடைக்கச்சையை எதற்கு ஒப்பிட்டுள்ளார்?

1. உண்மை 2. நம்பிக்கை 3. நீதி 4. மீட்பு

17) யூதரல்லாதபிற இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்வதற்காக அழைக்கப்பட்டவர்?

1. பேதுரு 2. பர்னபா 3. யோவான் 4. சவுல்

18) “உலகின் கடைசி எல்லை வரை எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்”என இயேசுயாருக்குக் கூறினார்?

1. திருத்தூதர்களுக்கு 2. திருத்தொண்டர்களுக்கு

3. அரசர்களுக்கு 4. மக்களுக்கு

19) படைவீரனிடம் இருக்கவேண்டிய முக்கிய பண்பு யாது?

1. பயிற்சிஎடுத்தல் 2. கீழ்ப்படிதல் 3. ஜெயித்தல் 4. விட்டுக்கொடுத்தல்

20) தீயோனால் வரும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்கும் வழிமுறைகளை பவுல் எந்த நிருபத்தில் எழுதினார்?

1. கொரித்தியர் 2. எபேசியர் 3. பிலிப்பியர் 4. கலாத்தியர்

(20 x 2 = 40)

## பகுதி II

**முதலாவது வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களிற்கு விடை எழுதுக.**

(1) 1. பாவத்தினால் இறையுறவிலிருந்து பிரிக்கப்பட்டவர்கள் மத்தியில் நேர்மையாளர்களாக செயற்பட்டவர் யார்?

2. திருவிவிலியத்தில் சங்கிலிக்கோர்வை போன்று தொடர்ந்து காணப்படும் தலைப்பு எது?

3. கிறிஸ்தவ வாழ்வில் மிகமுக்கியமான ஊடகம் எது?

4. இயேசுவின் கருணையால் குணம் பெற்றவர் யார்?

5. யூதர்கள் திருமணவிழாவை எத்தனை நாட்கள் கொண்டாடுவர்?

6. இயேசு எம்முடன் யார் மூலம் செயற்பட்டு வருகிறார்?

7. எமது நாட்டின் கல்வித்திட்டத்திற்காக பாரிய பணியாற்றிய போதகர் யார்?

8. யூதசமூதாயத்தில் பாரதூரமான குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை என்ன?

9. 1 கொத்தியர் 6 இன்படி எமது உடலின் உரிமை யாருக்கு உரியது?

10. பழைய வாழ்வில் இறைவனுக்கு விருப்பமில்லாத செயல்களை கைவிட்டு புதுவாழ்வு வாழ்பவர்கள் எதற்கு ஒப்பிடப்படுகின்றனர்?

( 10 x2 = 20 )

(2) 1. தொடர்பாடலை இலகுபடுத்த நாம் இன்று பயன்படுத்தும் கருவிகள் இரண்டு தருக?

2. இயேசு விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் மூன்று தருக?

3. நோயினால் பாதிக்கப்பட்டுள்ள உமது நண்பனுக்காக வேண்டி ஒரு சிறு விண்ணப்பம் எழுதுக?

(2 + 3+ 5 = 10)

(3) 1. ஊனியல்பின் செயல்களுள் இன்று சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் செயல் எது?

2. ஊனியல்பின் செயல்கள் மூன்று எழுதுக?

3. இன்றைய காலகட்டத்தில் மனிதனை அடிமைப்படுத்தும் உலகியல் நாட்டங்கள் 5 தருக?

(2 + 3+ 5 = 10)

(4) 1. இறைவன் மனிதனுக்கு தம்மை வெளிப்படுத்தும் பிரதான வழி என்ன?

2. இறைவார்த்தையை நாம் சரியாக விளங்கிக் கொள்ள எமக்கு வழிகாட்டுபவர்கள் மூவரைத் தருக?

3. இறைவார்த்தையின்படி வாழும் ஒருவர் தம்மைச் சுற்றியுள்ளவர்கள் மத்தியில் பணியாற்றும் ஐந்து வழிமுறைகள் எழுதுக?

(2 + 3+ 5 = 10)

(5) 1. எபேசியர் திருமுகத்தின் அடிப்படையில் கிறஸ்தவனுக்குரிய போர் ஆயுதங்கள் இரண்டு தருக?

2. இறைமக்களின் போராயுதங்கள் மூன்று தருக?

3. இன்று சமுதாயத்தில் தீய சக்திகள் எம்மிடையே பல வடிவங்களில் வருகின்றன. அவற்றில் ஐந்தினை எழுதுக.

(2 + 3+ 5 = 10)

(6) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. கானா ஊர்த் திருமணம்
2. தாவீது
3. இறை வார்த்தை
4. தொற்கா

( 2 x 5 = 10 )

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library